மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இப்போது அங்கே பெண்களுக்கான ஒரு உயர்நிலைப் பள்ளியை ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சிகளில் தென்னை வளர்ப்பு.

*675 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி மன்றங்களுக்கு தென்னை வளர்ப்புக்காக உதவித் தொகை ஏதேனும் வழங்கப்படுகின்றதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அரசு ஆணை 1062, நாள் 18-6-1977-ல் ஊராட்சித் தோட்டங்களைப் பராமரிக்க ஊராட்சி ஒன்றியம் ஒன்றுக்கு ரூ. 700 வீதம் 1977-78-க்கு ஒதுக்கப் பட்டுள்ளது. மாவட்ட அளவில் மொத்தத் தொகையையும் மாவட்ட ஆட்சியர் தேவையுள்ள ஊராட்சிகளுக்குப் பகிர்ந்து கொடுக்க ஆணையிடப்பட்டுள்ளது. இதில் தென்னை பராமரிப்பும் அடங்கும்.

திரு. ரா. உமாநாத் : துணைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் ஏற்பட்ட புயலின் காரணமாக ஏராளமான தென்னந்தோப்புகள் நாசமாகி இருப்பதாலே, இந்த ஒதுக்குதல் நார்மலாக இருக்கக் கூடிய ஒதுக்குதலாக இருக்கும்படி, அங்கு ஏற்பட்ட நஷ்டத்தைப் போக்குவதற்கு சீக்கிரமாக அந்த தென்னந்தோப்புகள் வரு வதற்கு பைனான்சியல் அசிஸ்டன்ஸ் ஏதாவது செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இது பொதுவாக ஒதுக்கப்பட்ட ஒன்று. வெள்ளத்திலே பாதிக்கப் பட்டவைகளுக்கு ஒதுக்குகின்ற விவரம் இல்லை.

திரு. துரை கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்குவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஊராட்சி மன்றங்களில் உள்ள அந்தத் தோட்டங்களில் ஊர் மகிழ்ச்சியாகவும், மணமாகவும் இருப்பதற்கு ஒவ்வொரு ஊராட்சி மன்றங்களுக்கும் ஒரு சந்தன மரம் அளிக்கின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

1978 மார்ச்சு 27]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: உத்தேசம் இல்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம்: துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகளிலே தென்னை வளர்ப்பது பயனுள்ள திட்டமாகும். அந்த அடிப்படையில் எல்லாச் சாலைகளிலும் கண்டிப்பாக தென்னை மரம் வளர்க்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டு அதற்கு உதவித் தொகை வழங்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, பொதுவாக தோட்டப் பராமரிப்பு என்கிற வகையிலேதான் இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதிலே 2/3 பாகம் அரசு மானியமாகவும், 1/3 பாகம் ஒன்றிய நிதியிலிருந்தும் வழங்கப்படுகின்றன. தென்னங்கன்றுகள் நடப்பட்டு அதைப் பராமரிக்க ஆகும் செலவு இதிலிருந்து வழங்கப்படுகிறது. எல்லாச் சாலைகளிலும் அமைப்பதற்கான குறிப்பு இதிலே இல்லை.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் தென்னங் கன்றுகள் சகாய விலையில் வாங்கிக் கொடுக்கப்படுகின்றன. இவை எத்தனை வருடங்களில் பலன் தரும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தென்னை எத்தனை வருடத்தில் பலன் தருமோ அத்தனை வருடத்திற்கு பலன் தரும்.

திரு. டி. பி. எம். பெரியசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காபி, டீ போன்றவைகளுக்கு போர்டு இருப்பதைப் போல தென்னைக்கும் ஒரு போர்டு அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறைக்கு உத்தேசம் இல்லை.

டாக்டர் கே. சமரசம்: துணைத் தலைவர் அவர்களே, முந்தைய அரசு காலங்களில் நட்டது 100 பட்டுப்போனது 101 என்று இருந்ததாகச் சொல்லப்பட்டது. அந்த நிலை மாறி நல்ல முறை யிலே அந்த மரங்களை வளர்ப்பதற்கும், செழிப்பாகப் பாமரிப்ப தற்கும் அரசு மேலும் பணம் ஒதுக்க முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. ஆள் தாண்டா தென்னை ஆயிரம் இருந்தால் அரசனும் அஞ்சுவான் என்று ஒரு பழமொழி உண்டு. அதற்கேற்ப ஒன்றியங்களின் பொருளாதாரத்தைப் பெருக்கும் வகையில் அதை ஊக்குவிக்க அரசு ஏதேனும் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, பராமரிப்பதற்கும், பாதுகாப்பதற்கும், ஒன்றியங்களின் நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்கும்தான் இந்த நடவடிக்கை.

திரு. அ. க. அரங்கநாதன் : தலைவரவர்களே, வெள்ளத்தாலும், புயலாலும் பாதிக்கப்பட்ட தென்னங்கன்றுகளைப் பாதுகாப்பதற்காக மானியம் கொடுத்து இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஒவ்வொரு பஞ்சாயத்துப் பகுதிகளிலும் இவ்வாறு பாதுகாக்கப்பட வகை செய்யப்பட்டு இருக்கிறதா ? தொய்யா, ஈச்சன், சாத்துக்குடி போன்றவைகளும் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. அவைகளுக்கு மானியம் கொடுக்க திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இது பொதுவாக தோட்டப் பராமரிப்புக்காக ஒதுக்கப்பட்டு இருக்கிற தொகை என்று குறிப்பிட்டேன். பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பற்றித் தனியாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த தென்னை வராத இடங்களில் புளிய மரம் நல்ல பலனை அளிக்கும். முன்பெல்லாம் பஞ்சாயத்துகளுக்கு புளியமரம் நடுவதற்கு உதவி அளிக்கப்பட்டு வந்தது. அதேமாதிரி புளியமரம் பராமரிக்கப்படுவதற்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உதவி அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஒவ்வொரு பகுதியிலும் எத்தகைய மரங்கள் பலன் அளிக்குமோ, அத்தகைய மரங்களை பராமரிக்கத்தான் இத் தொகை வழங்கப்படுகிறது.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : தலைவரவர்களே, பழத்தோட்டம் அமைப்பதற்காக ஒன்றியங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டு இருந்தாலும், அந்தப் பழத்தோட்டங்கள் ஊராட்சிகளில் இல்லை என்றால், அந்த ஊராட்சித் தலைவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

1978 மார்ச்சு 27]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, ஆங்காங்குள்ள ஊராட்சித் தலைவர் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, தி.மு.க. ஆட்சியில் மரங்களின் கிளைகள் வெட்டப்பட்டன. இந்த ஆட்சியில் அப்படி வெட்டப்படாமல் தடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மரமோ, கிளையோ எதையும் வெட்டக் கூடாது என்பது இந்த அரசின் கொள்கை.

கீரபாளையம் ஒன்றியத்தில் உள்ள சாலைப்பணியாளர்கள்.

*676 **வினா—திரு. துரை கலியமூர்த்தி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் வட்டம், கீரபாளையம் ஊராட்சி ஒன்றியத்தில், ரோடு வேலை செய்யும் பணியாளர்களை நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஊராட்சி ஒன்றியங்களில் சாலை வேலை செய்யும் பணியாளர்களை (கேங் மஸ்தூர்) நிரந்தரமாக்கும் திட்டம் ஏற்கனவே அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. துரை கலியமூர்த்தி : தலைவரவர்களே, கீரபாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் ரோடு வேலை செய்யும் பணியாளர்கள் 5-6 ஆண்டுகளாகத் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்கள். அவர்களின் வேலை நிரந்தரம் இல்லை. சிதம்பரம் வட்டத்திலுள்ள மற்ற ஊராட்சிகளிலும் இதே நிலைமை இருக்கிறது. ஆகவே, இதை உடனடியாக நீக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, ஒன்றியங்களில் 10 ஆண்டுக் காலத்திற்கு மேலாக பணி செய்கின்ற பணியாளர்களை நிரந்தரமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அந்தத் திட்டம் கீரபாளையம் ஒன்றியத்திற்கும் பொருந்தும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS